

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# 2015

## සෞන්දර්ය කලා විශ්වවිද්‍යාලය

## கட்புல மற்றும் அரங்காடற் கலைகள் பல்கலைக்கழகம்

## இலட்சிய நோக்கு

கட்புல மற்றும் அரங்கக் கலைகள் மூலம் மனித இனத்தின் அமைதிக்கான சிறந்த மத்திய நிலையமாக விளங்குதல்.

## பணிக்கூற்று

கலாசார ரீதியாக வளமான வாய்ப்புக்களை எல்லா மாணவர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் வழங்கல். ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் சுற்றாடலொன்றில் கலை மற்றும் நுண்கலை தொடர்பான தொழினுட்ப முன்னேற்றத்தை உறுதி செய்தபடி ஆசிய பிராந்தியத்தின் முன்னுரிமையைப் பெறல்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1.1 உபவேந்தரின் அதிகாரபூர்வ அறிக்கை -2015 | 1-5 |
| 1.2 ஒழுங்கமைப்பு | 6 |
| 1.3 கவுன்சில் அங்கத்தவர்கள் | 7 |
| 2. சன்மானம் பெற்றவர்களின் விவரங்கள் | 8 |
| 3. மாணவர்களினதும் வளங்களினதும் விவரங்கள் | 8-11 |
| 4. பணிக்குழுவினர் விவரங்கள் | 12-14 |
| 4.1 கல்விசார் மற்றும் துணைக் கல்விசார் பணிக்குழுவினர் விவரங்கள் | 12 |
| 4.2 நிர்வாக மற்றும் கல்விசரா பணிக்குழுவினர் விவரங்கள் | 13 |
| 4.3 பணிக்குழுவினர் மாற்றங்கள் | 13-14 |
| 5. பட்டப்பின் பட்டம் தொடர்பான விவரங்கள் | 14 |
| 6. வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விவரங்கள் | 14 |
| 7.ஆய்வு பற்றிய விவரங்கள் | 15-16 |
| 8. பணிக்குழுவினர் அபிவிருத்தி தொடர்பான விவரங்கள் | 16-17 |
| 8.1 பதவி நிலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், பற்றிய விவரங்கள் | 16-17 |
| 8.2 கல்வி சாரா உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய செயலமர்வுகள், கருத்தரங்குகள் பற்றிய விவரங்கள் | 17 |
| 9 . உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விவரங்கள் | 17-18 |
| 10. நூலகம் பற்றிய விவரங்கள். | 18 |
| 11. 2015 ஆண்டு மகபொல மற்றும் உதவிப்பணம் வழங்கல் பற்றிய விவரங்கள். | 18 |
| 12. கணக்காய்வுக் குழு அறிக்கை | 18-19 |
| 13. 2015 ஆண்டின் கணக்கறிக்கை | |
| 14. 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | |
| 15. 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான கணக்கறிக்கை தொடர்பான விசாரணைகளுக்கான பதில்கள் | |

**உப வேந்தரின் அதிகார பூர்வ அறிக்கையின் சாராம்சம்**

களணி பல்கலைக்கழகத்தின் இணைந்த நிறுவனமாகவிருந்த அழகியற் கல்வி நிறுவனம், அரசியலமைப்புச் சட்டத்தின் 44 வது உறுப்புரையின் 2 ஆம் பந்தியுடன் வாசிக்க வேண்டிய 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக மசோதாவின் 21 ஆம் உறுப்புரையின் பிரகாரம் 14000/24 இலக்கம் கொண்ட அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1ஆம் திகதியிலிருந்து, **கட்புல அரங்காடற்கலைப் பல்கலைக்கழகமாக**த் தாபிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான இப்பல்கலைப்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளின் போக்கு, நிர்வாக விடயங்கள் தொடர்பான சுருக்கத்தை இப்பல்கலைக்கழகத்திற்கு 30 ஒக்டோபர் 2014 ஆம் திகதி நியமிக்கப்பட்ட மூன்றாவது உபவேந்தர் என்ற ரீதியில் மிக்க மகிழ்ச்சியுடன் இங்கு முன்வைக்கின்றேன்.

எமது கட்புல, அரங்காடற் கலைப் பல்கலைக்கழகமானது, கட்புலக் கலைகள், சங்கீதம், நடனம் மற்றும் அரங்காடற் கலை எனும் மூன்று பீடங்களையும் அவற்றில் 22 கல்வித்துறைகளையும் உள்ளடக்கியது. 2015 ஆண்டு இப்பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது கட்புலக்கலைப் பீடத்திற்கு 101 மாணவர்களும் நடன மற்றும் அரங்காடற் கலைப் பீடத்திற்கு 253 மாணவர்களும் சங்கீத பீடத்திற்கு 223 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். தற்போது மொத்தம் 2181 மாணவர்கள் மூன்று பீடங்களிலும் நான்கு ஆண்டுகளிலும் கல்வி கற்கின்றனர். புதிய மாணவர்கள் தவிர, 427 மாணவர்கள் கட்புலக் கலைப் பீடத்திலும் 1015 மாணவர்கள் நடன மற்றும் அரங்காடற் கலைப் பீடத்திலும் 739 மாணவர்கள் சங்கீத பீடத்திலும் கல்வி கற்கின்றனர்.

2015 ஆம் ஆண்டின் மூன்று பீடங்களையும் சேர்ந்த 1275 மாணவர்களுக்குப் பகுதி மற்றும் முழு உதவிப்பணம் வழங்கப்பட்டது. 690 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி உதவிப்பணம் மற்றும் மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 1965 ஆகும். இது மொத்த மாணவர் தொகையின் 90.76 % ஆகும்.

கட்புல மற்றும் அரங்காடற் கலைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி அலகு 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சிரேட்ட பேராசிரியர் முதியான்சே திசாநாயக அவர்கள் அதன் பணிப்பாளராக நியமனம் பெற்றார். 2015 ஆம் ஆண்டில் அது பெற்றுள்ள முன்னேற்றம் பற்றி திருப்தியுற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதனைப் பாராட்டி அதனை ஒரு பட்டப்பின் கல்விப் பீடமாக மாற்றியது. அதில் பட்டப்பின் பாடநெறிக்கு 15 மாணவர்கள் பதிவு

செய்து கொண்டிருந்தனர். அவர்களில் 03 மாணவர்கள் கலைமுதுமானி பட்டத்திற்கும் 10 மாணவர்கள் கட்புலக்கலைகள் முதுகலைமானி பட்டத்திற்கும் பதிவு செய்துள்ளனர். கலாநிதி, தத்துவமுதுமானி ஆகிய பட்டங்களுக்காக ஒருவர் வீதம் ஏற்கனவே தமது கல்வியை முடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் வருடத்திற்கான மீண்டுவரும் செலவினங்களாக ரூபாய் மில்லியன் 673ம் மூலதன செலவாக ரூபாய் மில்லியன் 260 உம் இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**<u>கட்புல மற்றும் அரங்காடற் கலைப் பல்கலைகழகத்தின் வளங்கள் அபிவிருத்தி பற்றிய சுருக்கக் குறிப்பு பின்வருமாறு.</u>**

| **உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விவரங்கள்** | **மொத்தக் கிரய மதிப்பீடு ரூபாய் மில்லியன் (TEC)** | **2015 ஆம் வருடத்திற்கான செலவு (ரூபாய் மில்லியன்)** | **பௌதிக முன்னேற்றம்** |
|---|---|---|---|
| அல்பர்ட் கிறசன்ட் அபிவிருத்திச் செயற்றிட்டம். (கட்டம் III- படி II) சங்கீத பீட கட்டுமானம் | 68.0 | 19.9 | 75% |
| அல்பர்ட் கிறசன்ட் அபிவிருத்தி செயற்றிட்டம். (படி Iv) சங்கீத பீட கட்டுமானம் | 144.5 | 104.5 | 100% |
| அரங்கம் ஒளியூட்டல் மற்றும் தொடர்பாடல் இணைப்பிற்காக (சங்கீத பீட கேட்போர் கூடத்திற்கானது) | 10.3 | 6.8 | 100% |

**பணிக்குழு அபிவிருத்தி**

01. 2013 மற்றும் 2014 ஆம் வருடங்களுக்கான பணிக்குழு அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் நடாத்தப்பட்ட உயர் கல்விக்கான கற்பித்தல் பற்றிய பாடநெறியைப் பூரணப்படுத்திய ஆசிரியர் குழுவினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம். 2015.10.01

02. கல்வி சார் பணிக்குழுவினருக்காக Microsoft நிறுவனத்துடன் சேர்ந்து "Learning Material Development" செயலமர்வை நடாத்துதல். - 2015.11.12

03. 2015 வருடத்திற்காக உயர்கல்விக்காகக் கற்பித்தல் தொடர்பான பாடநெறியை ஆரம்பித்தல் - 2015.11.15

04. நிருவாக பணிக்குழுவினருக்கான “Research Methodology” செயலமர்வை நடாத்துதல். 2015.11.21 மற்றும் 2015.12.29 திகதிகளில்.

05. கல்வி சார் பணிக்குழுவினருக்காக கித்துல்கல "adventure camp " நிறுவனத்தில் இரண்டு நாள் வதிவிட செயலமர்வை நடாத்துதல். - 2015.12.20, 2015.12.21

**பல்கலைக்கழகம் முழுமையான பல்கலைக்கழகமாக மாறி பத்தாண்டு நிறைவைக் குறிப்பிடும் நிகழ்ச்சித்திட்டங்கள் பல ஒழுங்கு செய்யப்பட்டன.**

01. கட்புல கலைகள் பீடம் - பாரம்பரிய சித்திரங்கள், சிற்பங்கள் அடங்கும் கட்புல கலை கண்காட்சி மற்றும் உயிருள்ள காட்சிகள் அடங்கும் கலையக நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டன.

02.சங்கீதபீடம் - குறும் படங்கள், பாரம்பரிய சங்கீத நிகழ்ச்சிகள், கலாநிதி விக்டர் ரத்னாயக, லக்ஷ்மன் விஜேசேகர மற்றும் வித்துவான எட்வர்ட் ஜயகொடி ஆகியோர் உட்பட பழைய மாணவர்கள் பலர் பங்குபற்றிய சங்கீத மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடாத்தப்பட்டன.

03. நடன மற்றும் நாடக கலைப் பீடம் - விரிவுரையாளர் சதாநந்தன் விஷ்வநாதன் குழுவினரால் நடாத்தப்பட்ட தமிழ் கிராமியப்பாடல் நிகழ்ச்சி, மலை நாட்டு, தாழ்நாட்டு, சபரகமுவ நடன நிகழ்ச்சிகள், இசைக்கச்சேரிகள், இந்திய மற்றும் ஆசிய கல்விதுறைகளினால் முன்வவைக்கப்பட்ட ஆக்க நிகழ்ச்சிகள், தெருக்கூத்து நடன நிகழ்ச்சி, நாடக நிகழ்ச்சி, பேராசிரியர் காதிரி இஸ்மாயில் அவர்களின் விரிவுரை, இளைஞர் நாடக விழாவை பிரதிநிதிப்படுத்தியவாறு ‘*சத்திரபாணி*’ நாடகத்தை நடாத்துதல் (2015), இறுதி வருட பட்டதாரிகளினால் தயாரிக்கப்பட்ட நாடகமான “*ப்ரொமிதியஸ் பெம்வதி*’ நாடகம் (2015), நூல் வெளியீடுகள் மற்றும் பீடத்தினால் நேரடியாக நடாத்திய *கொஹொம்ப கங்காரிய* சாந்திகர்ம நிகழ்ச்சி ஆகியன.

04. பத்தாண்டு நிறைவு விழாவையொட்டி ஒய்வு பெற்ற சகல ஆசிரியர்களையும் கௌரவிக்கும் முகமாக “*சொந்தர்யமானி*’ ஆசிரியர் பாராட்டு விழாவை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**கட்புல மற்றும் அரங்காடற் கலைப்பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள், மற்றும் வேறு ஆக்கச் செயற்பாடுகள்.**

2015 ஆம் வருடம் ஜனவரி மாதம் 12 ஆம் 13 ஆம் இரண்டு தினங்களில் நாடகக் கலை பீடத்தினால் வதிவிட நடன செயலமர்வொன்றும் கருத்தரங்கொன்றும் இங்கிலாந்தின் லிவர்பூல் ஹோப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி றசெல் ஸ்வீனிஸ் இனால் பல்கலைக்கழகத்தின் நாடக முத்திரை நடன நவ நடன கல்விப் பிரிவினால் நடாத்தப்பட்டது.

"TxT தங்க நகை மற்றும் அலங்காரக் கண்காட்சி" கட்புல கலை பீடத்தின் துணிமணிகள் மற்றும் உடைகள் கல்விப்பிரிவினால் 2016 ஜனவரி மாதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் 9 மாணவிகளைக் கொண்ட “தூர்ய” வாதன வுறுந்தய மூலம் 2015-01-10 ஆம் திகதி சிறப்பான இசை நிகழ்ச்சியொன்று நடன மற்றும் நாடக கலைப் பீடத்தின் அரங்கத்தில் வெற்றிகரமாக முன்வைக்கப்பட்டது.

HETCசெயற்றிட்டம் மற்றும் ஆங்கிலக் கல்விப்பிரிவு இணைந்து 2015ஜனவரி 213 ஆம் திகதி ஆங்கில நாடகப் போட்டியொன்றை நடாத்தியது. நடன மற்றும் நாடகக் கலைப்பீடத்தின் இந்திய மற்றும் ஆசிய நடன கல்வித் துறை மாணவர்களினால் ஒழுங்கு செய்த *''நுார்தியம்பரி''* **(Nurthyambari)** நடன நிகழ்ச்சி 2015. ஜனவரி மாதம் பல்கலைக்கழத்தினால் நடாத்தப்பட்டது.

டென்மார்க், ஸ்கொட்லந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மனி மற்றும் ஆர்ஜன்ரினா ஆகிய நாடுகளை பிரதிநிப்படுத்தும் வகையில் கலைஞர்கள் பலர் கொண்ட குழு 2015.02.08 ஆம் திகதி நடன மற்றும் நாடகக் கலைப் பீடத்தைப் பார்வையிட வந்த அதே சமயம், அவர்களது வரவைக் குறிக்கும் வகையில் விருந்தினர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் நிகழ்ச்சிகளை அளித்தனர்.

2015-02-18ஆம் 19 ஆம் திகதிகளில் நடன மற்றும் நாடக கலைப் பீடத்தின் நடன நாட்டிய கலை வரலாறு மற்றும் சித்தாந்தங்கள் கல்விக்கான பிரிவின் சினிமா வட்டத்தினால் திரைப்படமொன்றும் அது தொடர்பான விமரிசன நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

காலங்சென்ற கலாநிதி பணீபாரத அவர்களின் நினைவு தினத்தையொட்டி 2015-02-24 ஆம் திகதி கலாசார மற்றும் கலை விவகாரங்கள் தொடர்பான அமைச்சரின் தலைமையில் பல்கலைக்கழக அரங்கில் தேசிய நடன தினம் நடாத்தப்பட்டது.

வருடாந்தம் இந்திய மற்றும் ஆசிய நடனக் கல்விப்பிரிவினால் ஒழுங்கு செய்து நடாத்தப்படுகின்ற ''சலங்கை கட்டும் விழா'' முதலாம் ஆண்டு மாணவருக்காக 2015-03-04 ஆம் திகதி முதன்முறையாக பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. கதகளி நடனம் கற்கும் மாணவரின் சிறப்பான ஒரு படிமுறையாக இதனைக் கருதலாம்.

கட்புல கலைப்பீடத்தின் வரலாறு மற்றும் கலை சித்தாந்தங்கள் கல்விப்பிரிவின் பிரதான சிரேட்ட விரிவுரையாளர் சந்திரகுப்த தேனுவர அவர்களினால் ஒழுங்கு செய்த கண்காட்சியொன்று 2015-04-28 - 30 ஆம் திகதிகளில் பொதுமக்களுக்காக கட்புல மற்றும் அரங்காடற் கலை பல்கலைக்கழகத்தில் ஜே.டி.ஏ பெரேரா கலையரங்கத்தில் நடாத்தப்பட்டது.

தேசிய மற்றம் கலாசார ரீதியான சமாதானத்தையும் புரிந்துணர்வையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், முதன் முறையாக தேசிய ரீதியில் கட்புல மற்றும் அரங்காடற் கலை பல்கலைக்கழகத்தினால் சிங்கள தமிழ் மொழிகள் மூலம் பஜன் பாடல் நிகழ்ச்சி கதிர்காமக் கோயிலில் 2015 ஜுலை மாதம் 15 ஆம் திகதி பல்கலைக்கழக ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரினால் இணைந்து நடாத்தப்பட்டது.

2015.07.02 தொடக்கம் 2015.07.15 வரை கொரியாவில் நடைபெற்ற உலகப் பல்கலைக்கழக மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளுக்கு இலங்கை பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப் படுத்தி கட்புல மற்றும் அரங்காடற் கலை பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் 400 மீற்றர் மற்றும் 800 மீற்றர் குறுந்துாரப் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றினர்.

பல்கலைக்கழகத்தின் பத்தாண்டு நிறைவு விழாவின் ஒரு அம்சமாக தெகிவளையில் நிறுவப்பட்ட புதிய ஆண்கள் விடுதிக்கு ''கீர்த்தி ஹேரத்'' விடுதி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சங்கீத பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ள ‘‘சரஸ்வதி பூசை’’ நிகழ்ச்சித்திட்டம் 2015 யூலை மாதம் 30 ஆம் திகதி பல்கலைகழகத்தின் லயனல் எதிரிசிங்க மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

கொரிய தேசிய பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் 10 பேர் பங்கு பற்றிய ‘‘சிஹின செயற்றிட்டம்’’ என்ற பெயரில் கலைத்திறன்களைப் பரிமாறிக் கொள்ளும் நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் 2015 ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை கட்புலகலைப்பீடத்தில் நடாத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா 2015.08.30 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

நடன மற்றும் நாடக கலைப்பீடத்தின் நடாக முத்திரை நிகழ்ச்சி, நாடக மற்றும் நவீன நர்த்தன கல்விப் பிரிவினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற நாடக விழா 2015.08.30 ஆந் திகதி தொடக்கம் 2015.09.15 ஆம் திகதி வரை பணீபாரத அரங்கத்தில் நடாத்தப்பட்டது.

கியூபாவின் முன்னாள் இலங்கைத் தூதுவர் உட்பட்ட குழுவினர் கட்புல மற்றும் அரங்காடற் கலைப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட 2015 செப்டம்பர் மாதம் 04ஆம் திகதி வருகை தந்த அதே சமயம் அதன்போது, கியூபாவின் தூதுவர் காரியாலயம், கட்புல மற்றும் அரங்காடற் கலை பல்கலைக்கழகம் ஆகியன ஒன்றிணைந்து 2016 ஆம் ஆண்டுக்காகக் கண்காட்சியொன்றை, கட்புல மற்றும் அரங்காடற் கலை பீடத்தில் ஒழுங்கு செய்து நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது.

சீனாவின் ஷன்டோல் பல்கலைக்கழகம் மற்றும் எமது கட்புல மற்றும் அரங்காடந் கலைப் கலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2015.10.12 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது. அதன்படி ஷன்டோல் பல்கலைக்கழக கலாசார குழுவொன்றினால் கலாசார நிகழ்ச்சியொன்று 2015.10.19 ஆம் திகதி பணீபாரத அரங்கில் நடாத்தப்பட்டது. அதுபோன்றே சீனாவின் ’ஷங்டொக் பல்கலைக்கழக கலாசாரக் குழுவொன்றினால் நிழற்படக் கண்காட்சியொன்று 2015.10.20 ஆம் திகதி கட்புல மற்றும் அரங்காடற் கலைப் பல்கலைக்கழகத்தில் ஜே.டி.ஏ பெரேரா கலையரங்கத்தில் நடாத்தப்பட்டது.

உயர் கல்வி அமைச்சு HETC செயற்றிட்ட உதவி மூலம் 50 கணினிகள் கொண்ட கணினிப் ஆய்வுகூடமொன்று நடன மற்றும் நாடக கலைப் பீடத்தில் 2015.நவம்பர் மாதம் 11 ஆம் திகதி விமரிசையாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயம் மற்றும் இந்திய கலாசார நிறுவனம் ஆகியன இணைந்து நிழற்பட கண்காட்சியொன்றை 2015.11.11 ஆம் திகதி கே.டி.ஏ. பெரேரா அரங்கத்தில் நடாத்தியது.


பரணாசி பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு வீதி நகர் அவர்களினால் நடன மற்றும் நாடக கலைப்பீடத்தின் இந்திய மற்றும் ஆசிய நடனக் கல்விப்பிரிவின் மாணவர்களினால் கதக் மற்றும் பாரத நாடக செயலமர்வொன்று 2015.11.11 ஆந் திகதி பணீபாரத நடன அரங்கில் நடாத்தப்பட்டது.

2015.11.18 ஆந் திகதி பண்டாரநாயக மண்டபத்தில் கலாநிதி பண்டித் டப்.டி அமரதேவ அவர்களின் பங்குபற்றலுடன் கட்புல மற்றும் அரங்காடற் கலைப் பல்கலைக்கழகத்தின் 8 ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதன்போது தமது முதலாவது பட்டத்தை 711 மாணவர்களும் பட்டமேற் பட்டத்தை 15 மாணவர்களும் கலாநிதிப்பட்டத்தை ஒருவரும் பெற்றுக் கொண்டனர். இரண்டு அமர்வுகளாக நடாத்தப்பட்ட அந்த விழாவின்போது, எமது பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர் பேராசிரியர் சரத் அமுணுகம, உருகுணு பல்கலைக்கழக உபவேந்தர், சிரேட்ட போராசிரியர் காமினி சமரனாயக ஆகியோர் விசேட உரையாற்றினர்.

பல்கலைக்கழக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக ஆய்வு முறைகள் தொடர்பான செயலமர்வொன்று 2015.11.26 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகப் பகுதித்தலைவர் கலாநிதி ஈ.எல். சுநேத்திரா, அவர்களினால் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு ஆராய்ச்சி கலந்துரையாடல் – 2015 நடாத்தப்பட்டது. அச்சமயம் விசேட உரையொன்று ஸ்ரீஜயவர்தன பல்கலைக்கழக பேராசிரியர் இரத்தினசிறி அரங்கல அவர்களினால் பனீபாரத அரங்கில் 26.11.2015 மற்றும் 27.11.2015 ஆகிய நாட்களில் நிகழ்த்தப்பட்டது.

**உபவேந்தர்.**

**26-11-2015**


பல்கலைக்கழக
கவுன்சில்
பல்கலைக்கழக மேல் சபை
உப வேந்தர்
பீடத்தலைலர்
பதிவாளர்
நிதிப் பொறுப்பாளர்
நூலகர்
பணிப்பாளர்கள் ( பி.G'U, SDS, CODL தொழில் வழிகாட்டல், தர நிர்ணயம், உடற் கல்வி
வேலைப் பொறியியலாளர்
உதவிப் பதிவாளர்
சிரே. உதவிப் பதிவாளர்
சிரே. உதவி நிதிப் பொறுப்பா
சிரே. உதவி நூலகர்
சிரே. உதவி உள். கணக்காய்வார்
பிரிவுத் தலைவர்
மருத்துவ உத்தியோகத்தர்
உதவிப் பதிவாளர்
உதவி நிதிப் பொறுப்பாளர்
உதவி நூலகர்
உதவி உள். கணக்காய் வாளர்
தலைவர் (IT, ELTU,Media)
கல்விசார் பணிக்குழுவினர்
கல்விசாராப் பணிக்குழுவினர்

**1.3 சபை அங்கத்தவர்கள்.**

| | |
|---|---|
| **உபவேந்தர்** | Prof. Ariyarathne Kaluarachchi |

**பீடங்களின் தலைவர்கள்**

| | |
|---|---|
| **பட்டப் பின் கற்கைகளுக்கான பீடம்** | Prof. Sarath Chandrajeewa |
| **கட்புல கலைகளுக்கான பீடம்** | Associate Prof. M.R. Podinilame |
| **சங்கீத பீடம்** | Senior Lecturer Kumara Liyanawatta |
| **நடன மற்றும் அரங்காடல் பீடம்** | Senior Lecturer Mangala Senanayake |

செனெற் சபையினால் நியமிக்கப்பட்டவர்கள்

| | |
|---|---|
| Faculty of Dance and Drama | Senior Prof. Mudiyanse Dissanayake |
| Faculty of Visual Arts | Senior Lecturer A.C. Thenuwara |

பின்வரும் அங்கத்தவர்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் 01 செப்டம்பர் 2014 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் மூன்றுவருட காலத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

Mr. Kamal Padmasiri
Mr. Bhashwara Senaka Gunarathne
Dr. Rohana Weerasinghe
Prof. Sunil Ariyarathne
Wisharada Edward Jayakodi
Ms. Jayantha Rukmani Siriwardena
Mr. A.M.P. Amarakoon

பின்வரும் அங்கத்தவர்கள் ஏப்பிரல் 2015 தொடக்கம் தமத இரண்டாவது தடவையாகவும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்

Prof. (Mrs.) Kusuma Karunarathne
Dr. Darmasena Pathiraja
Dr. L.A.W. Sirisena
Dr. Jayalath Manorathna
Mrs. Shithra Karunarathna
Mr. C. Maliyadda
Mr. Gamini Sumanasekara

பங்கபற்றாதவர்

Mr.B.M. Dayawansa Registrar

## 02. பெறப்பட்டுள்ள சன்மானங்களின் விவரங்கள்

1. 2015 – ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் நாடக விழாவின்போது நடன மற்றும் நாடக பீடத்தைச் சேர்ந்த அரங்கம். பாலோ மற்றும் நவீன நடன பாட நெறியைப் பின்பற்றும் 3 ஆம் ஆண்டு மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட ***"Mama Ada-Kumbai"*** என்ற குறுஞ் நாடகத்திற்கு சிறந்த தயாரிப்பிற்கான விருது, சிறந்த இயக்குனருக்கான விருது, சிறந்த கதை வசனத்திற்கான விருது, (ஜுரி ஆறுதல் பரிசு), சிறந்த நடிகருக்கான பரிசு, ஆடை அலங்காரத்திற்கான பரிசு, சிறந்த ஒளியூட்டத்திற்கான பரிசு, சிறந்த அரங்க அமைப்பிற்கான பரிசு (ஜுரர்களின் ஆறுதல் பரிசு) ஆகிய வழங்கப்பட்டன.

2. இந்தியாவில் கானிவெல் இல் நடாத்தப்பட்ட பெண்களுக்கான 18ஆவது உலக கிராமிய நடன போட்டியின்போது இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தூர்யா பாண்ட் போட்டியில் இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெண்கள் பின்வரும் இரண்டு பரிசுகளை வென்றார்கள்.

   - சிறந்த சங்கீத பிரிவில் முதற் பரிசு
   - சிறந்த நடனப் பிரிவில் முதற் பரிசு

3. சங்கீத பீட விரிவுரையாளரான திரு அசித அதபத்து சிறந்த புத்தாக்கத்திறன் -2015 பரிசை தேசிய சங்கீத பரிசளிப்பு விழாவின்போது பெற்றார். மற்றும் திரு ஹர்சா திஸாநாயக்க என்ற சங்கீத பீட மாணவன் தேசிய சங்கீத பரிசளிப்பு விழாவின்போது சிறந்த பாடகருக்கான விருதை வென்றார்.

4. ரைகம் ரெலி பரிசளிப்பு விழாவில் என்ற சங்கீத பீட விரிவுரையாளரான செல்வி இந்திக உபமாலி சிறந்த பாடகிக்கான விருதை வென்றார்.

**03.மாணவர்கள் மற்றும் வளங்கள் பற்றிய விவரங்கள் -2015**

(a) மாணவர்கள் மற்றும் வளங்கள் பற்றிய விவரங்கள -2015

| பீடம் | கல்வித் துறை | மொத்த மாணவர்கள் தொகை | கல்விசார் பணிக்குழுவினர் தொகை | கல்விசார் உதவிப் பணிக்குழுவினர்தொகை | தற்காலிக விரிவுரையாளர்களின் மொத்த கொகை | வெளிவாரி விரிவுரையாளர்கள் தொகை | மொத்த கல்வி சாரா பணிக்குழுவினர் தெகை |
|---|---|---|---|---|---|---|---|
| **கட்புல கலைப் பீடம்** | சித்திரம் | 92 | | | | | |
| | சிற்பம் | 51 | | | | | |
| | கட்புலத்தொடர்பால் மற்றும் ஆக்கக் கலை | 53 | | | | | |
| | நாடகக் கலை | 32 | | | | | |
| | பல்லூடக ஆக்கக் கலை | 38 | 24 | 04 | 18 | 125 | 21 |
| | ஆடை மற்றும் உடுதுணி தயாரிப்புக் கலை | 48 | | | | | |
| | கலை வரலாற்றுச் சித்தாந்தம் | 33 | | | | | |
| | பல்லூடகக் கலைகள் | 47 | | | | | |
| | அச்சகக் கலை | 35 | | | | | |
| **மொத்தம்** | | | **24** | **04** | **18** | **125** | **21** |
| **நடன மற்றும் நாடகக் கலைப் பீடம்** | | 1,2,3 &4 வருட | | | | | |
| | கண்டிய நடனம் | 481 | 41 | 34 | 06 | 24 | 15 |
| | கரையோரப் பிரதேச | 164 | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நடனம் | | | | | | |
| | சப்பிரகமுவநடனம். | 62 | | | | | |
| | வாத்திய சங்கீதம் | 20 | | | | | |
| | இந்திய மற்றும் ஆசிய நடனம் | 59 | | | | | |
| | நடன நாடக சித்தாந்தங்களும் வரலாறும் | 99 | | | | | |
| | அரங்க, கீழ்திசை பாலோ மற்றும் நவீன நடனம் | 137 | | | | | |
| **மொத்தம்** | | **1022** | **41** | **34** | **06** | **24** | **15** |
| **சங்கீத பீடம்** | | 1,2,3 &4 வருட | | | | | |
| | வட இந்திய சங்கீதம் | 384 | 38 | 16 | 02 | 45 | 17 |
| | தென் இந்திய சங்கீதம் | 21 | | | | | |
| | மேலைத்தேய சங்கீதம் | 114 | | | | | |
| | மானிட வரலாற்றுச் சங்கீதம் | 100 | | | | | |
| | பிரயோக சங்கீதம் | 94 | | | | | |
| | சங்கீத விஞ் ஞானம் | 30 | | | | | |
| **மொத்தம்.** | | **743** | **38** | **16** | **02** | **45** | **17** |

**(b). மாணவர்களினதும் வளங்களினதும் ஒப்பீட்டளவிலான விவரங்கள் 2014/2015**

| பீடம் | மொத்த மாணவர் தொகை | | கல்வி சார் பணிக்குழுவினரின் மொத்த தொகை | | கல்வி சாரா பணிக் குழுவினரின் மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| **சித்திரக்கலைகள்** | 445 | 427 | 26 | 24 | 04 | 04 |
| **நடன மற்றும் நாடகக் கலை** | 1142 | 1015 | 41 | 41 | 34 | 34 |
| **சங்கீதக் கலை** | 773 | 739 | 37 | 38 | 17 | 16 |
| **மொத்தம்** | **2360** | **2181** | **104** | **103** | **55** | **54** |

**(c)** முதற் **பட்டம் 2015**

| | | சேர்ந்த மொத்தம மாணவர் தெகை | | | |
|---|---|---|---|---|---|
| | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | இறுதி ஆண்டு |
| **கட்புலக் கலைப்பீடம்** | சித்திரம் | 19 | 19 | 16 | 38 |
| | சிற்பம் | 08 | 14 | 10 | 19 |
| | கட்புலத்தொடர்பால் மற்றும் ஆக்கக் கலை | 09 | 11 | 09 | 24 |
| | நாடகக் கலை | 10 | 08 | 07 | 07 |
| | பல்லூடக ஆக்கக் கலை | 10 | 09 | 10 | 09 |
| | ஆடை மற்றும் உடுதுணி தயாரிப்புக் கலை | 13 | 12 | 09 | 14 |
| | கலை வரலாற்றுச் சித்தாந்தம் | 10 | 08 | 09 | 06 |
| | பல்லூடகக் கலைகள் | 09 | 08 | 10 | 20 |
| | அச்சகக் கலை | 09 | 09 | 08 | 09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | | **97** | **98** | **88** | **146** |
| **நடன மற்றும் நாடகக் கலைப்பீடம்** | கண்டிய நடனம் | 96 | 110 | 123 | 152 |
| | கரையோரப் பிரதேச நடனம் | 39 | 39 | 37 | 49 |
| | சப்பிரகமுவநடனம். | 23 | 17 | 10 | 12 |
| | வாத்திய சங்கீதம் | 08 | 08 | 00 | 04 |
| | இந்திய மற்றும் ஆசிய நடனம் | 22 | 17 | 12 | 08 |
| | நடன நாடக சித்தாந்தங்களும் வரலாறும் | 35 | 32 | 53 | 17 |
| | நாடகக் கலை பாலோ நடனம் | 29 | 27 | 21 | 22 |
| **மொத்தம்** | | 252 | 250 | 256 | 264 |
| **சங்கீதப் பீடம்** | வட இந்திய சங்கீதம் | 113 | 98 | 94 | 79 |
| | தென் இந்திய சங்கீதம் | 09 | 09 | 01 | 02 |
| | மேலைத்தேய சங்கீதம் | 28 | 36 | 20 | 30 |
| | மானிட வரலாற்றுச் சங்கீதம் | 30 | 25 | 28 | 17 |
| | பிரயோக சங்கீதம் | 34 | 21 | 14 | 19 |
| | சங்கீத விஞ்ஞானம் | 09 | 06 | 09 | 06 |
| **மொத்தம்** | | 223 | 195 | 166 | 153 |

(d) **முதற் பட்டம் தொடர்பான ஒப்பீட்டளவிலான விவரம் 2014/2015**

| **பீடம்** | **சேர்ந்த மாணவர தொகை** | | **பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்கள் தொகை** | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014(2008/09) | 2015 (2009/10) |
| **சித்திரக்கலைகள்** | 98 | 97 | 61 | 110 |
| **நடன மற்றும் நாடகக் கலை** | 254 | 248 | 182 | 359 |
| **சங்கீதக் கலை** | 198 | 226 | 133 | 226 |
| **மொத்தம்** | 550 | 571 | 376 | 695 |

(e) **இளங் கலைப்பட்டதாரிகள் விபரம் (2015)**

| **பீடம்** | **பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்க** | **முதலாம் வகுப்பு** | **இரண்டாம் வகுப்பு (மேல்)** | **இரண்டாம் வகுப்பு கீழ்** | **சாதாரண சித்தி** | **பட்டம் பூரணப்படுத்திய தொகை** | **வுன சித்தி** |
|---|---|---|---|---|---|---|---|
| **கட்புலக் கலைப்பீடம்** | 112 | 04 | 58 | 35 | 13 | 110 | 02 |
| **நடன மற்றும் நாடகக் கலைப்பீடம்** | 369 | 59 | 208 | 73 | 19 | 359 | 10 |
| **சங்கீதக் கலைப்பீடம்** | 257 | 29 | 91 | 49 | 57 | 226 | 31 |
| **மொத்தம்** | 738 | 92 | 357 | 157 | 89 | 695 | 43 |

**4. பணிக்குழுவினர் விவரங்கள்**

**4.1 கல்விசார் மற்றும் உதவிக் கல்விசார் பணிக்குழுவினர் விவரங்கள்**

| பீடம் | சிரேட்ட பேராசிரியர் | பேராசிரியர் | துணைப் பேராசிரியர் | சிரேட்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | விரிவுரையாளர்/உதவி விரிவுரையாளர்(தற்காலிக) | விரிவுரையாளர் (பயிலுனர்) | ஆலோசகர் | உதவி வாசிப்பவர் | காட்சிப்படுத்துவர் | வெளிவாரி விரிவுரையாளர் | விஞ்ஞான உதவியாளர்.(தரம் 2) | கனணி வலையமைப்பு உதவி முகாமையாளர் 2(i ) | உடற்பயிற்கி ஆலோசகர் | திட்ட வடிவமைப்பாளரும் தொகுதி பகுப்பாய்வாளர்.(தரம் 1) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்புல கலைகள் பீடம் | - | 01 | 02 | 09 | 01 | 18 | 11 | 04 | - | - | 125 | - | - | - | - |
| நடன மற்றும் நாடகக் கலைப்பீடம் | 02 | 03 | 01 | 23 | 04 | 03 | 08 | 21 | 02 | 11 | 24 | - | - | - | - |
| சங்கீதப்பீடம் | - | 01 | 01 | 20 | 04 | 02 | 12 | 06 | 09 | - | 45 | 01 | - | - | - |
| தகவல் தொழினுட்ப அலகு | - | - | - | 02 | 01 | - | - | 01 | - | - | - | - | 02 | - | - |
| ஆங்கில அலகு | - | - | - | - | - | - | 02 | - | - | - | - | - | - | - | - |
| பல் கல்வி மத்திய நிலையம் | - | - | - | - | - | - | 01 | 02 | - | - | - | - | - | - | - |
| உடற் கல்வி அலகு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - |
| பரீட்சை பிரிவு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |

| | நூலகர் | சிரேட்ட உதவி நூலகர் | உதவி நூலகர் |
|---|---|---|---|
| நூலகம் | 01 | 01 | 02 |

**4.2.** கல்வி சாரா மற்றும் நிர்வாக பணிக்குழுவினர் தொடர்பான விவரம்

| பீடம் /கிளை | நிர்வாகி | கல்விசாரா | கனிட்ட |
|---|---|---|---|
| கட்புல கலைப்பீடம் | 01 | 11 | 10 |
| நடன மற்றும் நாடகக் கலைப்பீடம் | 01 | 11 | 04 |
| சங்கீதப் பீடம் | 01 | 14 | 03 |
| உபவேந்தரின்காரியாலயம் | 01 | 02 | 02 |
| பதிவாளரின் காரியாலயம் | 01 | 02 | 02 |
| கல்வி- நிறுவனம் | 01 | 03 | 01 |
| கல்வி சாரா நிறுவனங்களின் தொகை | 01 | 03 | 01 |
| பரீட்சை | 01 | 06 | 01 |
| மாணவர் சேவை | 01 | 07 | 01 |
| பொது நிர்வாகம் | 01 | 13 | 19 |
| நிதிப்பிரிவு | 04 | 14 | 03 |
| ஆய்வு மற்றும் வெளியீடுகள் | 01 | 01 | 01 |
| உள்ளகக் கணக்காய்வு | 02 | 01 | 01 |
| சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல் | - | | |
| உடற்கல்வி அலகு | | 01 | 01 |
| திறந்த மற்றும் தொலைக்கல்வி அலகு | 02 | 05 | 01 |

| | | | |
|---|---|---|---|
| பட்டப்பின் கல்வி அலகு | 01 | 01 | 01 |
| ஆய்வு மற்றும் ஊடகம் | | 02 | - |
| பணிக்குழு அபிவிருத்திக்கான அலகு | | - | - |
| தொழில் சார் வழிகாட்டலுக்கான அலகு | | - | - |
| சுகாதார சேவைகள் அலகு | | 02 | 04 |
| பராமரிப்புக்கான அலகு | 01 | 03 | 18 |
| ஒன்றிணைந்த முகாமைத்துவ அலகு | 01 | 01 | - |
| நூலகம் | | 06 | 05 |

**4.3 . பணிக்குழுவினரின் மாற்றங்கள்**

| | கல்வி சார் | கல்வி உதவி யாளர்கள் | நிதி மற்றும் நிர்வாகம் சார்பான | கல்வி சாரா |
|---|---|---|---|---|
| புதிய நியமனங்கள் | - | 01 | 03 | 11 |
| பதவியில் நிரந்தரப்படுத்தல் | 09 | 34 | 03 | 12 |
| பதவி உயர்வுகள் | 04 | 03 | - | 06 |
| இடமாற்றங்கள்(இப்பல்கலைக்கழகத்திலிருந்து ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு) | - | - | 01 | 05 |
| சேவை நீடிப்பு (57 வயதுக்கு மேல்). | - | 01 | 02 | 01 |
| ஓய்வு வழங்கல் | 02 | - | - | 01 |
| பதவிவிலகல் | 01 | - | 01 | 01 |
| பதவியை விட்டுச் செல்லல் | - | - | - | 02 |
| சேவை துண்டிப்பு | - | - | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| தொழில் விடுமுறை | **06** | **-** | **-** | **-** |
| கல்வி விடுமுறை | **07** | **-** | **02** | **-** |
| வெளிநாட்டுக்கான விடுமுறை | **39** | **20** | **05** | **02** |
| கல்வி விடுமுறை நீடிப்பு | **12** | **-** | **-** | **-** |
| தொழில் விடுமுறையின் பின்னர் சேவைக்கு அறிக்கை செய்தல் | **02** | **-** | **-** | **-** |
| கல்வி விடுமுறையின் பின்னர் சேவைக்கு அறிக்கை செய்தல் | **08** | **-** | **-** | **-** |
| மரணங்கள் | **-** | **01** | **-** | **-** |

**(5) வெளிவாரி பட்டப் பாடநெறிகள்**

**சிங்கள மொழி மூலம் பட்டப்பின் பட்டம்**

| பாடநெறியின் பெயர் | ஆண்டில் சேர்ந்த மாணவர் தொகை | 2015 ஆம் ஆண்டில் பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தொகை | பட்டப்பின ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த மாணவர்கள் மற்றும் மதிப்பீட்டுக்காக சமர்ப்பித்தவர்கள் |
|---|---|---|---|
| **M.Phil பட்டம்** | 14 | 01 | 06 |
| **Ph.D** | 01 | 01 | - |
| **MA** | - | 03 | 05 |

**6.** **வெளிவாரி பட்டம் தொடர்பான விவரங்கள்**

| **பதிவு செய்த மொத்த மாணவர் எண்ணிக்கை** | **கட்புல கலைகள் பொதுப் பாடநெறி 2013/2014** | | **2014/2015 நடன பட்டதாரிப் பொதுப் பாடநெறி** |
|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டானம் ஆண்டு | முதலாம் ஆண்டு |
| | 253 | - | - |

**07.** **ஆராய்ச்சிக் கலந்துரையாடலும் ஆராய்ச்சிக் கொடுப்பனவும்.**

| **பீடம்** | **ஆராய்சிக் கொடுப்பனவு பெற்ற பணிக்குழுவினர் தொகை** | **ஆராய்ச்சிக் கொடுப்பனவு பெறாத பணிக்குழுவினர் தொகை** | **ஆராய்ச்சிக் கலந்துரையாடலுக்கு சமர்ப்பிக்கத் தெரிவு செய்யப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **கட்புல கலைகள் பீடம்** | | 08 | 07 |
| **நடன மற்றும் நாடகக் கலைப் பீடம்** | 40 | 01 | 04 |
| **சங்கீத பீடம்** | 33 | 05 | 04 |
| **நூலகம்** | 04 | - | - |
| **பல்துறைக் கல்விக்கான மத்திய நிலையம்** | 02 | - | - |
| **கணினிமத்திய நிலையம்** | 02 | - | 01 |
| **ஆங்கில அலகு** | 02 | - | 02 |
| **நிர்வாக அலகு** | 12 | - | 0 |
| | | | |

இவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் இரண்டு பயிலுனர்களும் 2015 ஆண்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்கற்காக தமது கட்டுரைகளைச் சமர்ப்பித்திருந்தனர். மேற்படி கருத்தரங்கு 2015.11.26 மற்றும் 27 ஆம் திகதிகளில் கட்புல மற்றும் அரங்காடற் கலை பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்டது.

| பீடம்/பல்கலைக்கழகம் | ஆராய்ச்சி கருத்தரங்கிற்கான விண்ணப்பதாரிகள் தொகை |
|---|---|
| மொறட்டுவை பல்கலைக்கழகம் | 02 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 01 |
| களணிய பல்கலைக் கழகம் | 01 |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 01 |

**8. பணிக்குழு அபிவிருத்தி**

**07.01 நிர்வாகத்திற்குப்பொறுப்பான பணிக்குழுவினர் பங்கு பற்றிய செயலமர்வுகள் கருத்தரங்குகள் தொடர்பான விவரங்கள்**

| தொடர் எண் | செயலமர்வுகள் கருத்தரங்குகள் | ஒழுங்குபடுத்திய வர்கள் | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | நிர்வாகிகள் மத்தியில் கூட்டுறவு தந்திரோபாயம் தொடர்பான பயிற்சி | பல்கலைக்கழகம் | 1.திருமதி. ஏ.எல்.டி அமரதுங்க<br>2. திரு ஜே.ஏ.எஸ். குணசேகர | 2015.01.26<br>2015.02.03 |
| 02. | பொதுச் சொத்துக்கள் | நிறுவனம் | 1. திரு. எல்.ஜி.எஸ் ஜயசேகர<br>2.திரு. ஜி.எம்.கே. சுபவீர<br>3. திரு. ஜி.ஏ.ரி.டி. பெரேரா<br>4. திரு ஆர்.ஏ.குணபால | 2015.02.12 |

| | | | | |
|---|---|---|---|---|
| **03.** | உள்ளகக்கட்டுப்பாடும் கணக்காய்வும் | **APFA** | 1.திருமதி. G.பாலசூரிய<br>2செல்வி எச்.ஏ.ஆர். போபேகொட | **2015.08.07, 08** |
| **04.** | அரச மொழிக் கொள்கைகள் பற்றி மேல் மாகாண பல்கலைக்கழக பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | அரச மொழிகள் ஆணைக்குழு | 1.பேராசிரியர். களுஆரச்சி<br>2. பேராசிரியர் திரு ஆர்.எம்.எஸ். சந்திரஜீவ<br>3. திரு எஸ.எம்.எஸ். சேனானாயக 4. திரு எஸ். கே லியனவத்த<br>4. திரு.பி.எம் தயாவன்ச | **2015.10.08** |
| **05.** | பொதுக் கொள்ளல் முகாமைத்துவம் | **APFASL** | 1. திருமதி ஆர். ரி.எம் ஆர். றணதுங்க<br>2. திருமதி.ஏ.எல்.டி அமரதுங்க<br>3. திருமதி சி.வி. இம்புல்கொட<br>4. திருமதி ஜி.என்.சுவர்ணலதா<br>5. திருமதி எஸ்.ரி.என்.பெரேரா<br>6. திரு.எல்.ஏ.எஸ்.ஜயசேகர<br>7. திருமதி ஆர்.ரி.எஸ் ஜயசேகர 8.திருமதி. ஆர்.ரி.எஸ். றணசிங்க<br>9. திருமதி டி.எவ். ஏகநாயக<br>10. திருமதி .ஜி.ஏ.ரி.டி பெரேரா<br>11. செல்வி. டி.கே.கே. நாரம்பனாவ<br>12. திரு.ஜி.எம். கே.சுரவீர<br>13. திரு.ஜே.எஸ்.ஆர்.எஸ். குணசேகர<br>14. திருமதி. ஜே.கே. பாலசூரிய | **2015.09.28**<br>**2015.09.29** |
| **06.** | பொதுத் துறை கணக்கீட்டுத் தரம் | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் | திரு. டப்.எம். டப். வண்ணிநாயக்க | **2015.10.05** |

**08.02 கல்வி சாரா பணிக்குழுவினர் பங்கு பற்றிய கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்**

| தொடர் எண் | செயலமர்வுகள் கருத்தரங்குகள் | ஒழுங்குபடுத்தியவர்கள் | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | நிறுவனம் சார்ந்த அபிவிருத்திக்கான தொடர்பாடல் | தாய்லாந்தின் கேசெட்ஆர்ட் பல்கலைக்கழகம் | 1.திருமதி. எல்.ஜி.ஆர்.எல். ஜயசிங்க<br>2. திரு. ஜி.என்.சத்துரசிங்க | 2015.01.11தொடக்கம் 2015.01.24 வரை |
| 02. | சிற்றூழியர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோரின் திறன் விருத்தி தொடர்பான செயலமர்வு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 1.திரு. ஆர்.எம்.எஸ். றணசிந்தா<br>2. திரு.கே.ஏ.டி ஜயவர்தன<br>3. திரு. டப். பி..விராககமகே<br>4. திரு. யூ. எச. ஜே. கே. பிரியதர்சன<br>5.திரு. டப். எல். மைத்திரிபால | 2015.07.11 qòn |

**09. 2015 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு தொடர்பான தகவல்கள்**

| உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விவரங்கள் | மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபாய் மில்லியன் (TCE) | 2015ஆந்திகதிக்கான செலவு(ரூபாய் மில்லியன்) | பௌதிகஅபிவிருத்தி |
|---|---|---|---|
| அல்பர்ட் கிரசன்ட் அபிவிருத்திச் செயற்றிட்டம் (கட்டம் 3படி 2) | 68.0 | 19.9 | 75% |
| அல்பர்ட் கிரசன்ட் அபிவிருத்திச் செயற்றிட்டம் (கட்டம் 4) சங்கீத கட்டிடம் | 144.5 | 104.5 | 100% |
| அல்பர்ட் கிரசன்ட் அபிவிருத்திச் செயற்றிட்டம் (கட்டம் 4படி 2) | 68.2 | 14.4 | 5% |
| மேடை ஒளியமைப்பு மற்றும் தொடர்பாடல் (சங்கீத பீட அரங்கம்) | 10.3 | 6.8 | 100% |
| சங்கீத பீட அரங்கத்தின் மேடை ஒலியமைப்பு | 24.2 | 5.2 | 45% |

**10.நூலக நூல் ஒன்று சேர்த்தல் தொடர்பான ஒப்பீட்டளவிலான தகவல்கள் 2014/2015**

| நூலகம் | 2014 | 2015 |
|---|---|---|
| நூலக நூல்கள் | 52362 | 53514 |
| மாத சஞ்சிகைகள் | 48 | 45 |

11. மகாபொல புலமைப்பரிசில் பெறுவோர் பற்றிய விவரங்கள்

| பீடம் | மகாபொல புலமைப்பரிசில் பெறுவோர் தொகை | கொடுப்பனவு விவரம் ரூபாய் | வேறு புலமைப்பரிசில் பெறு வோர் தொகை | கொடுப்பனவு விவரம் ரூபாய் |
|---|---|---|---|---|
| **சித்திரக்கலைகள்** | 171 | 4,973,700.00 | 224 | 3,390,200.00 |
| **நடன மற்றும் நாடகக் கலை** | 262 | 12,545,800.00 | 680 | 9,169,600.00 |
| **சங்கீதக் கலை** | 257 | 8,013,800.00 | 371 | 6,665,500.00 |
| **மொத்தம்** | **690** | **25,533,300.00** | **1275** | **19,225,300.00** |

## 12. கணக்காய்வுக் குழு அறிக்கை

### அறிமுகம்

பல்கலைக்கழகக் கவுன்சிலின் கீழ் வருகின்ற ஒரு உப குழு கணக்காய்வுக் குழுவாகும். பல்கலைக்கழக நடைமுறைகளின் அளவறி ரீதியான தன்மையைத் தொடர்ச்சியான சுயமதிப்பீடுகள், அளவாய்வுகள், பல்கலைக்கழகத்தின் கல்விசார், நிர்வாகம்சார், நிதிசார் செயற்பாடுகளை உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியுடன் சேர்ந்து குற்றங்களையும் மோசடிகளையும் கண்டறிந்து தவிர்த்தல் மற்றும் பொது வளங்களின் முறையான முகாமைத்துவத்தை நல்லாட்சி மூலம் உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல் உள்ளக கணக்காய்வு அலகின் பணிக்கூற்றாகும் அதே சமயம் கணக்காய்வுக் குழு அதற்காக விதந்துரைகளைச் செய்ய கடப்பாடுடையது.

### செயலடைவு

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் நான்கு முறை கூடிய கணக்காய்வு குழு, கணக்காய்வாளர் நாயகத்தின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான விரிவான கணக்காய்வு அறிக்கைகளையும் காலத்திற்கு காலம் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உபவேந்தருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளையும் அவற்றின் அவதானிப்புக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளையும் விதந்துரைகளையும் கைவிடாது தொடர்ச்சியாக கண்காணிப்பதும் செயற்படுத்துவதுமாகும்.

மீளாயப்பட்ட வருடத்தின்போது அதற்கு முன்வைக்கப்பட்ட எல்லா முன் கணக்காய்வு செயற்பாடுகளையும் உள்ளக கணக்காய்வு அலகானது பூரணப்படுத்திய அதே சமயம், எல்லா கணக்காய்வு விசாரணைகளுக்கும், கணக்காய்வு அறிக்கை வரைபுகளுக்கும் கணக்காய்வாளர் நாயகத்தின் விரிவான கணக்காய்வு அறிக்கைகளுக்கும் விடையளிப்பதை ஒருங்கிணைத்ததன் மூலம் அவற்றுக்கான விடைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தது. அவசரமாக கவனிக்கத் தேவைப்பட்ட சில முக்கிய பிரச்சினைகளுக்கு உபவேந்தரின் வழிகாட்டலின் கீழ் தேவையான அவதானிப்புக்களையும் விதப்புரைகளையும் செய்ய உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் முடிந்துள்ளது.

**தடைகள்**

மீளாயும் வருடத்திற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தில் அடங்கும் விசேட விசாரணைகள் போன்ற கணக்காய்வுக்கு முன்னரான செயற்பாடுகளுக்கு குறிப்பிட்டளவு நேரம் தேவைப்பட்டதாலும் கணக்காய்வு உதவியாளர்கள் இன்மையாலும் எல்லாச் செயற்பாடுகளையும் பூரணப்படுத்த உள்ளகக் கணக்காய்வு அலகினால் முடியவில்லை.

**எதிர்காலத் திட்டங்கள்**

வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தவும் பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியை மீளாயவும் அதனை வலுவூட்டவும் தேவையான விதந்துரைகளைச் செய்ய உள்ளகக் கணக்காய்வு அலகிற்குத் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.